

வேலூர் மாவட்டம் காட்பாடி அடுத்த பொன்னை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுவரும் உயர்மட்ட மேம்பாலத்தை நீர் வளத்துறை அமைச்சர் துரைமுருகன் பார்வையிட்டு ஆய்வு செய்தபோது எடுத்தபடம். அருகில் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### வேலூர் மாவட்டம் காட்பாடியில்

# புதிய ரெயில்வே மேம்பாலம் அமைக்கும் பணி விரைவில் தொடங்கும்!

## நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் பேட்டி!

வேலூர், அக். 20 –

வேலூர் மாவட்டம் காட்பாடியில் புதிய ரெயில்வே மேம்பாலம் அமைக்கும் பணிகள் விரைவில் தொடங்கும் என நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் கூறினார். வேலூர் மாவட்டம் காட்பாடி தாலுகா பொன்னை அருகே உள்ள பரம சாத்து என்ற இடத்தில் பொன்னை ஆற்றின் குறுக்கே ரூ.18 கோடியில் புதிய சிறு தடுப்பணை கட்டப்படவுள்ளது. இந்த நிலையில் தமிழக நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன்



இந்த சிறு தடுப்பணை கட்டும் இடத்தை நேரில் சென்று, பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதை தொடர்ந்து பொன்னையாற்றின் குறுக்கே ரூ.40 கோடியில் சோளிங்கர் சித்தூர் சாலையில் அமைக்கப்படும் புதிய மேம்பால கட்டுமானப் பணிகளை அதிகாரிகளுடன் சென்று ஆய்வு செய்தார். மேல்பாடி பகுதியில் பொன்னையாற்றின் குறுக்கே ரூ.13 கோடியில் அமைக்கப்பட்டு வரும் தரைப் பாலத்தையும் குகையநல்லூர் பகுதியில் பொன்னையாற்றின் குறுக்கே ரூ.11 கோடியே 50 லட்சத்தில் தடுப்பணை கட்டும் பணிகளையும் அமைச்சர் துரைமுருகன் ஆய்வு செய்தார்.

அதை தொடர்ந்து அமைச்சர் துரைமுருகன் செய்தியாளர்களிடம் கூறுகையில் பொன்னையாற்று மேம்பால பணிகள் இன்னும் மூன்று மாதத்திற்குள் முழுமையாக நிறைவடையும். காட்பாடியில் புதிய ரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணிகள் விரைவில் தொடங்கும் என்று கூறினார்.

ஆய்வின் போது காட்பாடி ஒன்றிய குழுத்தலைவர் வேல்முருகன், துணை தலைவர் சரவணன், துணை மேயர் எம்.சுனில்குமார், ஒன்றிய செயலாளர்கள் கருணாகரன், சி.ரவி மற்றும் அரசு அதிகாரிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### மகளிர் புரட்சிப் பயணம், புதுமைப் பெண் திட்டம் மகளிர் உரிமைத் தொகை, காலை உணவுத்திட்டம் கொடுத்து

# திருவண்ணாமலை வருகை தரும் முதல்வருக்கு எழுச்சிமிகு வரவேற்பு!

## பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அறிக்கை

திருவண்ணாமலை, அக்.20-

மகளிர் புரட்சி பயணம், புதுமைப்பெண் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, காலை உணவுத்திட்டம், வேளாண்மைக்கு தனி நிதிநிலை அறிக்கை என தினந்தோறும் திட்டங்களை கொடுத்து, திருவண்ணாமலைக்கு வருகை தரும் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத்தலைவர் அண்ணன் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு, மாவட்ட எல்லையில் எழுச்சியான வரவேற்பு அளிப்பது குறித்து, பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அறிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில்...

திராவிட மாடல் ஆட்சியின் நாயகர், தமிழ்நாடு முதலமைச்சர், கழகத்தலைவர் அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்



கள் திருவண்ணாமலையில் நடைபெறவுள்ள வட தமிழக வாக்குச்சாவடி முகவர்கள் பயிற்சி பாசறைக்கூட்டத்தில் கலந்து கொள்ள அக்டோபர் 21ம் நாள் மாலை 6 மணிக்கு திருவண்ணாமலைக்கு வருகை தரவுள்ளார்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் நின்று, "எல்லோருக்கும் எல்லாம்' எனும் திராவிட கொள்கையினை முன்வைத்து, இட ஒதுக்கீடு எனும் சமூக நீதியை காத்து, நடைமுறைப்படுத்தி வருகிற, சமூகநீதி பாதுகாவலர், மகளிர், மாணவர்கள், விவசாயிகள், இளைஞர்கள், வணிகர்கள் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை தினம், தினம் செயல்படுத்தி இந்தியாவின் நம்பர்1 முதல்வராக உயர்ந்து நிற்பவர்.

திருவண்ணாமலை மாவட்ட எல்லையான கீழ்பென்னாத்தூர் ஒன்றியம் சோ.காட்டுக்குளம் பகுதியில் நிர்வாகிகள் கழகத்தலைவருக்கு எழுச்சியான வரவேற்பு அளித்திட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளைக்கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு, எழுச்சியான வரவேற்பு அளித்திட கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்புரை! மேயர் பிரியா ராஜன் தலைமை!

# 74 'அ' வட்டத்தில் கலைஞர் நூற்றாண்டு விழா!

## நடிகர் விஜயகுமார் - கவிதா பாரதி - அறந்தாங்கி நிஷா பங்கேற்பு!

சென்னை, அக். 20-

சென்னை கிழக்கு மாவட்டம், திரு.வி.க. நகர் வடக்குப்பகுதி. கலைஞர் நூற்றாண்டு விழா "கலைஞர் என்பது அன்பாகும். கருணை அவரின் பண்பாகும்" எனும் தலைப்பில் சந்திர யோகி சமாதி தெருவில் 74 அ வட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன் தலைமையில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு (இந்துசமய அறநிலையத்துறை, பெருநகர வளர்ச்சிக்குழு அமைச்சர்) சிறப்புரை ஆற்றினார்.

வழக்கறிஞர் ப.தாயகம் கவி எம்.எல்.ஏ., செ.தமிழ்வேந்தன், எம்.சாமிகண்ணு, சரிதா மகேஷ் குமார், பி.உதய சங்கர், பெரம்பூர் ஆர்.ராஜன் ஆகியோர் முன்னிலையில் நடிகர் விஜயகுமார், இயக்குநர் நடிகர் கவிதா பாரதி, அறந்தாங்கி நிஷா, கலாநிதி வீராசாமி எம்.பி., ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

வட்டகழக செயலாளர்கள் ஜி.கிருஷ்ணகுமார், எஸ்.புஷ்பராஜ் ஆகியோர் நன்றி கூறினார்கள்.

## வலைதளங்களில் வலம் வருவது!





